REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# உண்மை

# UNMAI

இதழ் 8 மாதம் இருமுறை விலை ருபா4.00

உள்ளே


- கேள்வி பதில்
- சாத்தான் வேதம் ஓதுகிறது
- பத்தினிகள் வேடத்தில் பரத்தைகள்
- திருமலை டாக்டர் ஞானசேகரன் கடத்தல் நாடகம்
- பாதகர்களின் படுகொலை
- முஸ்லிம் காங்கிரஸ் தலைவரின் கொலை முயற்சி அன்னிய படையின் ஓர் நாடகமா?


# அதிகாரம் பரவி விட்டது

# ஆரம்பம் 10000

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள வட-கிழக்கு மாகாணசபை நிர்வாகத்தால் கிழக்கு மாகாணத்தில் நியமிக்கப்பட்ட ஆளும் கட்சி அரசியல் அதிகாரியொருவர் மாகாணசபை நிர்வாகத்துக்கு உட்பட்ட அரச நியமனங்களுக்கு விலை நிர்ணயித்துள்ளாராம் என அப்பகுதியில் பலத்த பேச்சுக்கள் அடிபடுகிறது.

அண்மையில் இவர் மாகாண சபைக்குட்பட்ட ஓர் திணைக்கள ஊழியர் நியமனத்தில் தலா 10,000 ரூபாவை சந்தோஷமாக கேட்டு பெற்றுக் கொண்டாராம். இன்னமும் பல நியமனங்களுக்கு அட்வான்ஸ் சந்தோஷம் பெறுவதற்கு ஏற்பாடுகள் நடைபெறுகிறது எனவும் பேச்சு அடிபடுகிறது.

அதிகார பரவலாக்கலின் கீழ் அரச நியமனங்கள் அனைத்தையும் தமது கரங்களில் முழுமையாக ஒப்படைக்க வேண்டும் என் மாகாணசபையின் பிடிவாதத்தின் அடிப்படை இலட்சியம் இதுதான் என்பதை தற்சமயம் அப்பகுதி மக்கள் உணர்ந்து கொண்டார்களாம் எனவும் கூறப்படுகிறது.

(2 பக்கம் பார்க்க)

## எச்சரிக்கை!

படித்த தமிழ் வாலிபர்களும் யுவதிகளும் தொழில் வாய்ப்புகள் பெறுவதில் பெரு முயற்சி எடுக்கின்றனராம். குறிப்பாக இந்த நிலை மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரும்பான்மையாக காணப்படுகிறதாம். இச்சந்தர்ப்பத்தை சரியாக பயன்படுத்தி அரசியல் அதிகாரத்தில் உள்ளசிறுபான்மைஇன சில ஊழல் பேர்வழிகள் எரிகின்ற வீட்டில் பிடுங்கியது லாபம் என பலவகையான ஏமாற்றுகளை தமது தரகர்கள்மூலம் நடைமுறைபடுத்தி வருகின்றனராம். பலருடைய பணத்துக்கு கோவிந்தா போடப்பட்டு விட்டதாகவும் கூறப்படுகிறதாம். மட்டக்களப்பு மாவட்ட மக்கள் எவ்விதமாக தேசியக்கட்சிகளுக்கு ஆதரவு நல்கினுலும் காலத்துக்கு காலம் தேசியக்கட்சி அரசின் நாமத்தால் இவ்விதமாக ஏப்பம் விடப்படுகின்றதாம் என அப்பகுதி மக்கள் ஏக்க பெருமூச்சு விடுகின்றனர் என கூறப்படுகிறது. அரசும் இவற்றை கண்டும் காணுததும் போல் இருப்பது தேசிய கட்சியின் வளர்ச்சிக்கு நல்லதல்லஎனபலரும்கூறுகின்றனராம். வட-கிழக்கு மாகாண தமிழ் இளைஞர்களும் தென்னிலங்கை சிங்கள இளைஞர்களும் வன்முறையை நாடியதற்கு மூலகாரணமே இவ்விதமான கட்டுக்கு மீறிய ஊழல் மோசடிகளே என பலரும் சுட்டி காட்டுகின்றனர்.

வாழ்க ஊழல் ஒழிப்பு ?<br>
வளர்க தேசிய அரசியல் ? ?<br>
ஒளிமயமாகட்டும் இளைஞர் யுவதிகளின்<br>
எதிர்காலம் ???

## பக்கிரிகளின் பரிதாபம்

கல்முனை பகுதியில் இரண்டு ஆடுகளை தவற விட்ட ஹிந்தி பேசும் இந்திய ராணுவ வீரன் ஒருவர் ரூ பக்கிரி ரூ பக்கிரி என விசாரித்து திரிவதை கண்ட முஸ்லிம் வழிப் போக்கர் ஒருவர் இஸ்லாமிய மத சம்

(7ம் பக்கம் பார்க்க)

## மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில்

அன்னிய ராணுவத்தின் அனுசரணையுடன் நடாத்தப்பட்ட கட்டாய ராணுவப்பயிற்சிக்கு தமிழ் இளைஞர்களை பலாத்காரமாக பிடிக்கும் நடவடிக்கையை வட-கிழக்கு மாகாணங்

(8ம் பக்கம் பார்க்க)

# அந்நியப் படை சூழ்ச்சி

## அப்பாவி சமூகங்களுக்கு ஆபத்து

அண்மையில் அம்பாறை மாவட்டத்தை சேர்ந்த அக்கரைப்பற்று கிராமத்தில் வைத்து இந்திய ராணுவம் வட-கிழக்கு மாகாண சபை ஆளும் கட்சி ஊடாக முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களுக்கென பெருந்தொகையான ஆயுதங்களை வழங்கியுள்ளதாக நம்பகமான செய்திகள் கூறுகின்றன.

இவ் ஆயுத கையளிப்பை தொடர்ந்து முஸ்லிம் காங்கிரஸ் தமது பாதுகாப்புக்கென கூறிக்கொண்டுஏனைய இந்திய ஏவலாளி இயக்கங்களை போல் தாமும் முஸ்லிம் இளைஞர்களை கட்டாய இராணுவ பயிற்சிக்கு பிடிப்பதற்கு தாயாராகி வருகிறது என அப்பகுதி முஸ்லிம் மக்கள் மத்தியில் பரவலாக பேசப்படுகிறது.

அம்பாறை மாவட்டத்தில் இருந்து தான் அன்னிய ராணுவ வாபஸ் வைபவம் ஆரம்பமாகும் என்றசெய்திகள் வெளிவந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் அன்னிய ராணுவம் அங்கு வாழும் தமிழ் முஸ்லிம் ஆகிய இரு சமூகத்தவருக்

(7ம் பக்கம் பார்க்க)

வருந்துகிறோம்

இம்முறை எமது உண்மை பத்திரிகை சில இடையூறுகளின் காரணமாக சுணங்கியதற்கு வருந்துகிறோம் (ஆ-ர்)

முற்போக்கு அரசியல் நடுநிலை செய்தி பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை
UNMAI
நவம்பர் 15 புதன்கிழமை 1989

# இந்தப் பணம் எங்கிருந்து வருகிறது

வட-கிழக்கு மாகாணங்களில் அண்மைக்காலமாக கட்டாய பயிற்சிக்கென பிடிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்களுக்கு பயிற்சி முடிவில் வட-கிழக்கு மாகாணசபை ஆளும் கட்சி ஊதியம் என்ற பெயரில் ஆயிரம் ரூபாய் கைப்பணமாக கொடுக்கிறார்கள் என கூறப்படுகிறது. இது உண்மையானால் இப்பணம் சட்டவிரோதமாக பயிற்றப்படும் ஓர் படைக்கு மத்திய அரசால் வழங்கப்பட்டிருக்க முடியாது என்பது தெளிவான உண்மை.

அப்படியானால் இந்தப்பணம் எங்கிருந்து யாரால் எதற்காக ஏன் கொடுக்கப்படுகிறது? என்பது பெரும் சர்ச்சைக்குரிய விடயமாகிறது. இந்தப்பணம் மாகாணசபை நிதியில் இருந்து ஒதுக்கப்பட்டதா? அல்லது இந்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்டதா? இவ்விரு வழிகளிலும் எந்த வழியால் வந்திருந்தாலும் அவை தவறான வழிமுறைகளே. மாகாணசபை பணத்தில் ஒதுக்கப்பட்டிருப்பின் அப்பணம் வட-கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்கும் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வு பணிகளுக்குமாகவே ஒதுக்கப்பட்டிருக்கும் என்பதில் எதுவித சந்தேகமும் இருக்க முடியாது. அவ்வாறாயின் அல்லல் பட்ட அப்பாவி மக்களின் பணத்தை இவ்விதமாக துஷ்பிரயோகம் செய்வது மன்னிக்க முடியாத குற்றம். அதே வேளை இந்தப்பணம் இந்திய தரப்பால் வழங்கப்பட்டிருப்பின் இதன் பின் விளைவுகள் வட-கிழக்கு மாகாணங்களில் வாழும் அப்பாவி மக்களுக்கு வெகு பயங்கரமான அழிவுகளுக்கு வழிவகுக்கும் என்பதும் தெளிவான உண்மை.

இலங்கை-இந்திய உடன்பாட்டுக்கு அமைய இன்று நாட்டில் எட்டு மாகாண சபைகள் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால், இந்த எட்டாவது மாகாணசபை மட்டும் எமது சொந்த நாட்டின் இறைமைக்கும், ஒருமைக்கும், தன்னாதிக்கத்துக்கும், பாதுகாப்புக்கும் எதிரான வகையிலேயே தனது சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. இந்நடவடிக்கைகளை மத்திய அரசு சாதாரண நடவடிக்கைகள் என கருதி விடமுடியாது. இலங்கை முழுவதும் வாழுகின்ற சகல இன மக்களதும் பாதுகாப்புக்கு மத்திய அரசே பொறுப்பானது. எனவே வட-கிழக்கு மாகாணங்களில் வாழுகின்ற இந்நாட்டு மக்களுக்கு எதிரானதும் எமது நாட்டின் நடைமுறைகளுக்கும் மாறான நடவடிக்கைகளை தொடர்ந்து புரிந்து வரும் தற்போதைய வட-கிழக்கு மாகாணசபை நிர்வாகம் கலைக்கப்பட வேண்டும்.

# திருமலை டாக்டர் ஞானசேகரன் கடத்தல் நாடகம் ஓர் ஆய்வு

அண்மையில் திருகோணமலை மாவட்ட அபிவிருத்தி சங்கம் (ரீ.டி.டீ.எ.) என்ற அமைப்பின் ஸ்தாபகர் டாக்டர் ஞானசேகரன் ஆயுத பாணிகளால் கடத்தி செல்லப்பட்டுள்ளார். இதுவரை அஊர் விடுதலை செய்யப்படவில்லை. எனவே அவர் உயிருடன் இருக்கிறாரா என்ற நியாயமான சந்தேகம் பரவலாக காணப்படுகிறது. எடுத்ததற்கும் விடுதலை புலிகள் மீது பழி சுமத்தும் இந்திய தரப்பும் அவர்களின் நேரடியான, மறைமுகமான அடிவருடி இயக்கங்களும் இந்த விடயத்தில் மௌனம் சாதித்து கொண்டார்கள். எனவே விடுதலை புலிகள் தப்பித்து இச்சம்பவத்தில் இருந்து விலக்கி கொள்வப்பட்டு விட்டார்கள் என்ற அளவில் மகிழ்ச்சி.

அப்படியானால் இந்திய அடிவருடி நான்கு இயக்கங்களில் ஒன்றுதான் இக்கைங்கரியத்தை செய்து முடித்துள்ளார்கள். யார் அந்த இயக்கம் என்பது தான் இன்றுள்ள கேள்வி இவர்கள் நால்வரும் ஒருவரை முந்தி ஒருவர் ஞானசேகரனுக்காக பரிந்து அவரை விடுதலை செய்யும்படி அறிக்கைகளும் அடிக்கடி விட்டு மக்களை குழப்பி வருகிறார்கள்.

தமிழர்களை பாதுகாக்க வந்த அன்னிய ராணுவம் இவ்விடயத்தில் மௌனமாக இருந்து தமது சம்மதத்தை சூசகமாக தெரிவித்துள்ளனர் என்பது இங்கு கவனிக்க தக்க விடயம். திருமலை மக்கள் மத்தியில் மாகாணசபை ஆளும் கட்சியினரின்மீது தான் வலுவான சந்தேகம் உள்ளதை காணக்கூடியதாக உள்வது. அதில் உண்மையும் இருக்கலாம் என்பதை மறுக்க முடியாதபடி இந்திய ராணுவத்தின் அமைதி மாகாண சபை ஆளுங்கட்சியின் தலைவர் திரு. பத்மநாபாவின் உரைகள் ஆகியன சான்று பகர்கின்றன.

இன்னொரு சாரார் உருத்திராட்ச மாலை அணிந்தவர்களான ஈரோஸ் இயக்கத்தின் மீதும் சந்தேகம் கொள்கிறார்கள். அதற்கு அவர்கள் கூறுகின்ற காரணம் திரு. ஞானசேகரன் கடத்தப்படுவதற்கு சில நாட்களுக்கு முன்னர் ஓர் இரவில் தூயவர் எனக் கூறிக்கொள்ளும் இயக்க உறுப்பினர்களும் மக்கள் பிரதிநிதியொருவரும்ஆயுத பாணிகளாக திரு. ஞானசேகரனுடைய வீட்டிற்கு சென்று வெளிநாட்டு பண உதவிகள் சம்பந்தமாக தகராறு செய்துள்ளனர் எனவே ஏன் ஈரேர்ஸ் இந்த காரியத்தை செய்திருக்க முடியாதென்பது அவர்கள் பக்கவாதம்.

ஈரோஸ் இயக்கம் நிதிகளை சேர்த்துக் கொள்வதில் வல்லவர்கள் மட்டுமல்ல வேறு யாராவது நிதிகள் சேகரிக்கிறார்கள் என அறிந்தால் அவர்களை ஜனநாயக கொலை செய்து தாம் அந்த நிதிகளை பெறுவதில் மும்முரமாக செயல்படுபவர்கள் என்பது சந்திக்குவராத உண்மைதான் இருந்தாலும் இவ்விடயத்தை பொறுத்தவரை ஈரோஸ் இயக்கம் திருகோணமலை மண்ணில் இவ்வாறான துணிச்சலான காரியங்களை செய்யக்கூடிய வல்லவர்களாக இருப்பர் என்பதும் ஏற்றுக்கொள்வது சற்று சிரமமானதே.

ரெலோ, ஈ.என்.டி.எல்.எப். போன்ற இயக்கங்களை பொறுத்தவரை அவர்களும் திரு.ஞானசேகரன் போன்றவர்களை கடத்தும்அளவிற்கு தெளிவுள்ளவர்கள் என்பதை ஏற்றுக்கொள்வதும் ஏற்புடையதாகாது. மக்கள் மத்தியிலும் திரு. ஞானசேகரன் விடயத்தில் இவர்களின் பெயர்கள் அடிபடுவதை காணமுடியவில்லை.

திரு. ஞானசேகரனை விடுவிக்குமுகமாக ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் சுழற்சிமுறை உண்ணாவிரதங்களும் திருமலை நகரில் பரபரப்பை ஏற்படுத்தி வருகின்றது எனக்கூறின் அது மிகையாகாது.

இந்த ஞானசேகரன் யார் இவ்வளவு தூரம் மக்கள் மத்தியில் இவரை பிரபலப்படுத்த வேண்டிய காரணம் என்ன என்பதை சற்று விரிவாக எமது நிருபர் ஆராய்ந்து பார்த்ததில் பல உண்மைகள் வெளியாகின. இன்று இவருக்காக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்ட பல அப்பாவி பொதுமக்களுக்கு இவர் கடத்தப்படும் வரை இவர் யார் என்பதே தெரியாது. இன்று இவருக்காக ஆர்ப்பாட்டங்கள் போராட்டங்கள் நடத்துபவர்களின் பின்னணியில் பல மோசடி மன்னர்களின் உந்துதல் இருப்பதாக புத்தி ஜீவிகள் மத்தியில் ஓர் பலமான கருத்து நிலவுகிறது. திரு. ஞானசேகரனுக்கு உதவியாக இருநீத ஓர் ஆசிரியர் திடீர் என தலைமறைவாகி தற்சமயம் கொழும்பில் உள்ள வெளிநாட்டு தூதரங்களின் வாசல் படிகளில் ஏறி இறங்கி கொண்டிருக்கிறார் எனவும் கூறப்படுகிறது.

பல புத்தி ஜீவிகள் இச்சம்பவம் பற்றி தெரிவிக்கையில் 1983ம் ஆண்டு ஆயுத போராட்டத்தின் அனர்த்தங்களை கொண்டு பல பொதுநலத் தொண்டர்கள் உருவாகியது அப்பாவி மக்களுக்கு உதவுவதற்காக வல்ல அவர்களின் அவஸ்தைகளை மூலதனமாக கொண்டு தமது பைகளை நிரப்பி கொள்வதற்காகவே என கூறுகிறார்கள்.

(தொடரும்)

# அதிகாரம் பரவி விட்டது....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அண்மையில் நேர்முக பரீட்சை நடைபெறவிருந்த ஜனசக்தி பயிற்சி ஆசிரியர்கள் நியமனத்தையும் தமது கையில் ஒப்படைக்க வேண்டும் என்ற போராட்டத்தின் பின்னணி இதுதானும் எனவும் கூறப்படுகிறது. இனியென்ன அப்பம் சுட்டு விற்று பிள்ளைகளை படிப்பித்தவர்கள் தமது குடியிருப்புகளை விற்று பிள்ளைகளுக்கு உத்தியோகம் பெற வேண்டியதுதான்.

வட-கிழக்கு மாகாணங்களின் இளைஞர்களுக்கும் பெற்றோர்களுக்கும் இவ்வாறான நடவடிக்கைகள் புதிதானதல்ல முன்னைய தேசிய அரசியலில் கலந்திருந்த தலைமைகளும்பிரதிநிதிகளுமீ தன்மானமற்று கையாண்ட இவ்வாறான கேவலமான நடவடிக்கைகளால்தான் கடந்த காலத்தின் விரக்தியுற்ற இளைஞர்கள் இக் கேவலங்களை மாற்றியமைக்க ஆயுதம் ஏந்தி போராட முன்வந்த தன் பிரதான காரணம் என்பதை யாரும் மறுக்க முடியாது.

மீண்டும் பழையபடி வேதாளம் முருங்கை ஏறிய கதையாக வட-கிழக்கு மாகாணசபை இக்கொடுரத்தை ஆரம்பித்துள்ளது. இளைஞர்களை புதிய வடிவில் ஆயுதங்களை ஏந்த தூண்டுவதாகவே அமையும் என்பதை சுட்டிக் காட்டியே ஆக வேண்டும்.

மக்களின் விருப்புக்கு எாறாக இந்திய அரசு நியமித்த மாகாணசபை நிர்வாகம் உடனடியாக கலைக்கப்பட்டு ஜனநாயக ரீதியாக புதிய நிர்வாகம் ஏற்படுத்த தவறின் அரசு நியமனங்களின் விலை நாளடைவில் 10,000. 15,000, 20,000 25,000, 30,000 என்று உயர்ந்துகொண்டு போவது தவிர்க்கமுடியாதது. இந்நிலை ஏற்படுமானல் வட-கிழக்கு மாகாணங்களில் வன்முறைகள் புதிய, புதிய வடிவில் உருவெடுத்து அமைதிக்கு நிரந்தரமான விடுதலை கொடுக்கப்படும் நிலை ஏற்பட்டாலும் ஆச்சரியப்பட தேவையில்லை.

**ஏஜன்சிகள் தேவை**

உண்மை பத்திரிகை விற்பனை செய்ய நாடு முழுவதும் ஏஜன்சிகள் தேவை.

முகாமையாளர்
16, 16வது ஒழுங்கை
கல்லூரி வீதி,
கொழும்பு-13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பாவி வாலிபர்களின் படுகொலைக்கு காரணம் யார்?

அக்கரைப்பற்று திருக்கோவில் பகுதிகளில் விடுதலை புலிகள் ஈ. பி. ஆர். எல். எப். இயக்க முகாம் மீது நடத்திய தாக்குதலின் போது கட்டாய பயிற்சிக்கு பலாத்காரமாக பிடிக்கப்பட்ட இளைஞர்கள் விடுதலை புலிகளைக் கண்டதும் ஆர்ப்பரித்து அவர்களுடன் இணைந்து கொள்ள தயார் நிலையில் முன் வருகையில் க்.பி.ஆர்.எல்.எப். குண்டர்களால் கொன்று குவிப்பட்டுள்ளனகர். இவ்வாறு கொலை செய்யப்பட்ட அப்பாவி இளைஞர்களின் தொகை கிட்டத்தட்ட ஐம்பது வரையிருக்கும் என கூறப்படுகிறது.

ஏனையோரில் பெரும் பகுதி விடுதலை புலிகளால் பாதுகாக்கப்பட்டுள்ளனர். இத்தாக்குதலில் ஈ.பி.ஆர். எல்.எப். முகாம் நிர்மூலமாக்கப்பட்டதுடன் பெருந்தொகையான ஆயுத உபகரணங்களையும் மற்றும் அரிசி, பருப்பு போன்ற உணவு பண்டங்கள் மூடை மூடைகளாகவும் பெருந்தொகையாக தொண்டர் படைக்கான யூனிபோம் போன்றவைகளை ஈ.பி.ஆர் எல். எப். இயக்க உளவு இயந்திரப் பெட்டிகள் இரண்டு நிரப்பப்பட்டு விடுதலைபுலிகளால் எடுத்து செல்லப்பட்டதாகவும் அப்பகுதி மக்கள் கூறுகின்றனர்

இவற்றுடன் ஈ பி.ஆர். எல்.எப். முகாமில் தரித்து நின்ற பஜோரா ஜீப் ஒன்றும் விடுதலை புலிகளால் எடுத்து செல்லப்பட்டுள்ளது என நம்பகரமாக தெரியவருகிறது.

# சந்தர்ப்பவாதிகளின் நிலை தர்மசங்கடம்

அண்மையில் வட-கிழக்கு மாகாணசபை ஆளுங்கட்சியினர் ஈரோஸ் இயக்கத்தினர் தம்முடன் இணைந்து செயல்படவேண்டும் தவறின் அந்நிய இராணுவ வெளியேற்றத்துடன் அப்பகுதியிலிருந்து ஈரோஸ் இயக்கமும் வெளியேற வேண்டும் என கண்டிப்பான உத்தரவு இடப்பட்டுள்ளதாக நம்பகரமான செய்திகள் கூறுகின்றன.

மாகாணசபை ஆளும் கட்சியின் இவ் உத்தரவால் சந்தர்ப்பவாத ஈரோஸ் இயக்கம் தர்மசங்கடமான நிலைக்கு தள்ளப்பட்டு தமது பாணியில் ஒப்பாரிகள் வைத்து திரிகின்றனராம்.

1987ம் ஆண்டு ஒப்பந்தத்திற்குப் பின்னர் முன்னரைவிட அதிகமான ஆயுதங்கள் தம்வசம் இருப்பதாகவும் மோதலுக்கு தயார் நிலை எனவும் தலைநகர் பத்திரிகை ஒன்றுக்கு பேட்டி கொடுத்த ஈரோஸ் இராணுவ நடவடிக்கை அந்நியரிடம் ஆயுதங்களைப் பெற்றுக்கொள்வது நியாயம் எனக்கூறும் ஈரோஸ் அந்நியனின் உதவியுடன் பாடசாலை செல்ல வேண்டிய சிறுர்களுக்கு ஆயுதப் பயிற்சி வழங்கிய ஈரோஸ் அந்நிய விஸ்தரிப்பு வாத இராணுவத்திற்கு மறைமுகமாக ஒத்துழைப்பு வழங்கும் ஈரோஸ் ஈ.பி.ஆர். எல்.எப். எதிர்த்து போராடுமா? அல்லது ஈ.பி.ஆர். எல்.எப். இயக்கத்தின் உத்தரவை பணிவுடன் ஏற்று அவர்களிடம் சரணுகதி அடைவார்களா? அல்லது வழமைபோல் ஒப்பாரிகள் வைத்து மக்களை மேலும் மேலும் ஏமாற்றப் பார்க்கின்றார்களா? என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

எது எவ்வாருயினும் ஈரோஸ் விலாங்கு மீன் போல் புலிகளுக்குத் தலையும் ஏனைய இயக்கங்களுக்கு வாலையும் காட்டி இதுவரை தனது தேவைகளை வெகு சாதுர்யமாக பூர்த்தி செய்து வந்ததுடன் அப்பாவி மக்களையும் ஏமாற்றி வந்ததன் பலாபலன்களை இனிமேல்தான் அனுபவிக்கப் போகிருர்கள்.

(ந.நி.

# அப்பாவி ஆசிரியர் தாக்கபட்டார்

கோட்டை கல்லாறு கிராமத்தில் ரெலோ இயக்கத்தை சார்ந்த காமுகன் ஒருவரின் காடைத்தனங்களைப்பற்றி அண்மையில் உண்மையில் வெளிவந்த செய்தியை தொடர்ந்து இச்செய்தி சம்பந்தமாக சந்தேகத்தில் ரெலோ இயக்க ஆதரவாளரான கோட்டை கல்லாற்றை சேர்ந்த ஆசிரியர் ஒருவர் காமுகனும் அவனது இயக்க உறுப்பினன் ஒருவனுலும் மிருகத்தனமாக தாக்கப்பட்டுள்ளார்.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது மேற்படி ஆசிரியர் கடந்த பொது தேர்தலின்போது ரெலோ இயக்க சார்பில் போட்டியிட முயற்சிகள் மேற்கொண்டது சம்பந்தமாக தற்போதைய ரெலோ இயக்க மக்கள் பிரதிநிதி ஏற்கனவே இவ்வாசிரியர் மீது காழ் புணர்ச்சி கொண்டிருந்தாராம் எனவும் அந்த கோபத்தை சந்தர்ப்பத்தை சரியாக பயன்படுத்தி ஆசிரியரை பழி தீர்த்துள்ளார் என கூறப்படுகிறது.

எது எவ்வாருயினும் இருடய்யா என அழைக்கப்படும் காமுகனின் காடைத்தனம் குறைந்த பாடில்லை என கூறப்படுகிறது. காடைத்தனத்தை கட்டுப்படுத்த வேண்டிய ரெலோ இயக்கம் கடையர்களை ஊக்குவிக்குமுகமாக அப்பாவி அநியாயமாக தண்டிப்பது அப்பகுதி மக்கள் மத்தியில் பலத்த அதிருப்தி நிலவுகிறது. காடையர்களின் இயக்கங்களுக்கு கண்மூடித்தனமாக ஆதரவு வழங்கும் மேற்படி ஆசிரியர் போன்றவர்களுக்கு இது ஓர் நல்ல பாடம் என மக்கள் மத்தியில் பேச்சு அடிபடுகிறது.

(ந. நி·)

# அம்பாறையில் அந்நியர் பங்கு!

அம்பாறை மாவட்டத்தில் நடந்த வன்முறை சம்பவங்களில் அந்நியர் சிவில் உடைதரித்து களத்தில் குதித்திருந்ததாக அங்குள்ள மக்கள் மத்தியில் பரவலாக பேச்சுக்கள் அடிபடுகிறது. இவ்வன்முறை தாக்குதல்களில் பலியான நவம்பர் ஐந்து கெரில்லாக்கள் என பெயரிடப்பட்டுள்ள கெரில்லாக்குழுவில் பலி கொள்ளப்பட்டவர்கள் பலாத்காரமாக கட்டாய பயிற்சிக்கு பிடிக்கப்பட்ட தமிழ் இளைஞர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அதேவேளை பொலிஸ் நிலைய தாக்குதல்களில் மாண்டு போன பொலிசாரின் எண்ணிக்கையில் பெரும் பகுதி சிவில் பாதுகாப்பு அட்டை என வட-கிழக்கு மாகாணசபையால் அமைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களான படை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இத்திட்டமிட்ட தாக்குதல்கள் இந்திய உளவுப் படை வட-கிழக்கு மாகாணசபைக்கு இட்ட உத்தரவின் பேரிலேயே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்திய ராணுவம் தொடர்ந்தும் எமது மண்ணில் நிலைகொள்ள ஏற்புடையதாகவே இத்தாக்குதல் இலங்கை படைகளுக்கெதிராக உத்தரவிட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இத்தாக்குதலின்போது அப்பாவி பொது மக்களை கொன்று குவித்த கொடுமையை பெரும்பாலும் அந்நிய சிவில் ராணுவ வீரர்களே செய்து முடித்து அப்பழியை இலங்கை படைமீது சுமத்துவதன் மூலம் இலங்கை படைகளுக்கெதிராக தமிழ் மக்களை திசைதிருப்பி விட்டு தொடர்ந்தும் வன்முறைகளை நிலைநிறுத்துவதன் மூலம் இலங்கை தீவு முழுவதும் ஓர் இனக்கலவரத்தை தூண்டிவிடும் தந்திரோபாயம் என்ற கருத்து வட-கிழக்கு மாகாண புத்தி ஜீவிகள் மத்தியில் பேசப்படுகிறது.

எது எவ்வாருயினும் அழிவுகளுக்கு ஆளாகப் போவது அப்பாவி தமிழ், முஸ்லிம் மக்கள் என்பது ஜீரணிக்க முடியாத உண்மை.

(ந: நி.)

# இவர்களெல்லாம் அதிகாரிகளாம்

திருக்கோணமலை துறைமுகம் சம்பந்தப்பட்ட சபையொன்றின் உயர் அதிகாரியான வடிவான ஒரு தமிழர் தமிழ் தொழிலாளர்கள் தமது குறைபாடுகள் பற்றி முறையிட செல்கையிலும் மற்றும் முறைப்பாடுகள் சம்பந்தமாக விசாரணை செய்கையிலும் தொழிலாளர்களை ஆண்டான் அடிமை பாணியில் மூன்ரும் தர கீழ்த்தரமான வார்த்தைகளால் திட்டி தீர்ப்பதுடன் வெளியே போ என கர்ச்சிக்கிருராம். அண்மையில் இவ்வதிகாரி திருகோணமலை சுங்க இறங்கு துறையில் வைத்து இயந்திரப் படகோட்டி ஒருவரை பொதுமக்கள் முன்னிலையில் வைத்து மிக கீழ்த்தரமான வார்த்தைகளால் ஏசியதை பார்த்து பொது மக்கள் இவ்வதிகாரியின் நடத்தை பற்றி மிக கேவலமாக விசாரித்துள்ளனர்.

கொழும்பு துறைமுகத்தில் பணியாற்றும் சகல மட்ட தொழிலாளர்களுடனும் சிங்களம் பேசும் உயர் அதிகாரிகள் நடந்துகொள்ளும் பண்பை சுட்டிக்காட்டி கொழும்பு துறைமுகத்தில் பணியாற்றும் இன்னுமொரு தொழிலாளி இவர் போன்ற அதிகாரிகள் கொழும்பு துறைமுகத்தில் பணியாற்ற வருவார்களேயானல் சபையினுலேயே இவ்வாருன துர்நடத்தைக்கு தண்டனைக்குட்படுத்தப்படுவார் எனவும் தமிழீழத்தின் தலைநகர் என பெருமை கொள்ளும் தமிழ் நகரில் பண்பற்றவர்களின் நிர்வாகம் அமைந்திருப்பதனுல் தான் இவர் போன்றவர்களின் நடவடிக்கைகளுக்கு எதிராக எந்த நடவடிக்கைகளும் எடுக்க முடியாது இருக்கின்றது என கூறி திருமலை தொழிலாளர்கள்மீது பரிதாபப்பட்டாராம்.

அற்பர்களை அதிகாரிகளாக நியமிக்கப்பட்டால் இவ்வாருன நடவடிக்கைகளை தாஞ அவர்கள் கையாள்வார்கள். தமிழர்களின் ஆட்சியில் உட்பட்ட பகுதியில் வாழுகின்ற தமிழ் தொழிலாளர்களின் நிலையை எண்ணி பல சுய சிந்தனை உள்ள தமிழர்கள் வேதனைப்படுகின்றனராம். அப்பாவிகளை அநியாயமாக தண்டிக்கும் இயக்கங்களின் பார்வையில் இவர் போன்ற பணமுதலைகள் அகப்படாத தன் மர்மம் என்னவே என திருகோணமலை துறைமுக பகுதி தொழிலாளர்கள் அங்கலாய்க்கின்றனர்.

(ந. நி.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய குமுறல்கள்

## தியாகி

இரா. பிரான்சிஸ் அவர்களின்
ண்ணீர் அஞ்சலி

தமிழர்களின் தலைவிதியை
தாங்களே மாற்ற எண்ணி
தமிழ் இளைஞர் சிலர்
தம்மையணி திரட்டுகையில்
தன்னையும் இதில் இணைத்து
தமிழீழ விடுதலைப் புலியானாய்

புனிதர் ஒருவரது
பெயரை நீ கொண்டாய்
புண்பட்ட தமிழ ரைக்காக்க
முற்பட்டாய் இதனால்
முள்முடியைச் சுமந்தாய்

அணிக்கு இளைஞர்களையனுப்பி
அணிக்கு அணி செய்தாய்
தமிழர் பிணிக்கும்
மருந்தானாய்

களங்களை நீ கண்டாய்
கலங்காமல் முன்சென்றாய்
பிணங்களைப் பார்த்தாலும்
பின்வாங்காப் புலியானாய்

அரசியல் பொறுப்பேற்றாய்
அனைவர்கும் பொதுவானாய்
இதமாகப் பணியினை
இறுதிவரை செய்து வந்தாய்

அன்னியக் கைக்கூலிகள்
அண்மித்தபோதும்
அஞ்சாமல் போரிட்டு
வீரமரணத்தை யேற்ற
தீரனாய்

அஞ்சியவர்கு சதமரண்ம்
அஞ்சாதோர்க்கு ஒரு மரணம்
அடிக்கடி உன்வாயில்
அடிபடும் வார்த்தையிது

உன் நினைவுகள்
சாதவதமானது - அவை
சாகாது,
இலட்சிய வீரனேயுனக்கு
இறப்பு முடிவல்ல
இன்னும் ஒரு
தொடக்கமே!

உன் பிரிவால் துயருறும்
**நண்பர்கள் - சகோதரர்கள்**

---

வடக்குக்கிழக்கில்
அன்றெல்லாம்
மேடுகளும், பள்ளங்களும் இருந்தன
இன்றெல்லாம்
மேடுகள் மட்டுமே இருக்கின்றன
பிணக்குவியல்கள்
பள்ளங்களையும்
நிரப்பி விட்டன
மானிட உணர்வுகளை
மதிப்பதாகப் பறைசாற்றிக் கொண்டே
மார்க்ஸ்ஸிசத்தை நேசிப்பதாக
படம் மாட்டிக் கொண்டே
மக்களின் உயிர்களைப்
பறிக்கின்றார்கள்.

---

கிழக்குக்கு விடுதலைச் சுடரை
படரவிட்ட வீரப்புலியே!
உன்னால் உயிர் கொடுக்கப்பட்ட
எத்தனையோ
கொடியவர்கள் கும்பல்
ஒன்றியுள்ள நாய் போலத் தானும்
நடந்து கொள்ளாது
உன்னைக் கொன்றனரே!
நீ எமைவிட்டுச் சென்றாலும்
உன் பாசறையில் பயின்ற
ஆயிரம் மாவீரர்கள்
உன் வழி தொடர்ந்து
உனது இலட்சியத்தை அடைவார்கள்
கொடியவர்கள் கொட்டம் அடங்குவர்

**நண்பர்கள்**

---

## ஆணவம் பிடித்தோரே

ஆணவம் பிடித்தோரே
ஆட்டிப் படைப்போரே
அன்னை தந்தையைக்
கொன்று குவிப்போரே

கேளுமின் கொலை வெறி
கோரத்தனம் கொஞ்சநாள்
கொடுமைகள் வெகுநாள்
கொண்டிருந்த தில்லை

பதை பதைக்கப்பலரை
பாதையிற் கடத்திக்
படுகுழியிற் புதைத்தப்
பாவிகளே பாருங்கள்

நின்றறுக்கும் தெய்வம்
இன்றறுக்கும் உம்மை
அன்னையர் கண்ணீர்
அழியாத வீரம்

காலம் கதை சொல்லும்
கோலம் அழிந்த மக்கள்
பாலம் அமைப்பார்
சூலம் கொண்டழிப்பார்

தேர்ந்து எடுங்கள் தேர்தலை
தெரியும் அப்போ வேந்தரை
வெற்றி வேங்கை என்பதை
வீணரே நீவீர் அறிவீரோ?

இயற்றியவர்
**திருமலைத்தூதன்**

---

# பத்தினி வேடத்தில் பரத்தைகள்

கடந்த சில நாட்களுக்கு முன்னர் தூய ஜனநாயகவாதிகள் என தம்மை இனம் காட்டிக்கொண்டு குழப்பன வார்த்தைகளை பயன்படுத்தி அழகு தமிழின் துணையோடு அப்பாவி தமிழ் மக்கள் மத்தியில் ஏதோ தாம்தான் அறிவாளிகள் என்ற பிரமையை ஏற்படுத்த முயற்சிக்கும் அதேவேளை தமது இயக்கத்தின் பெயரால் பையை நிரப்பிக் கொள்ளும் சோஷலிச வாதிகளின் பழம் பெரும் நடிகர் ஒருவரின்பெயரை கொண்ட சுந்தரமான மக்கள் பிரதிநிதியொருவர் இந்நாட்டின் பிரதான தலைவர் ஒருவரின் காரியாலயத்துக்கு ஏதோ தமது அலுவலாக சென்றாராம். அத்தலைவரின் வாயிலில் உள்ள சிங்கள பாதுகாப்பதிகாரிகளிடம் தம்மை யார் என சிங்களத்தில் அறிமுகம் செய்து தனது பிரதிநிதித்துவ அடையாள அட்டையை காண்பித்ததும் இவர் தங்கு தடையின்றி உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டார். இவருடன் கூட வந்த இவரின் செயலாளரை பாதுகாப்பதிகாரிகள் தமது கடமையை நிறைவேற்ற சோதனை போட்டனராம்.

அச்சமயம் மெய்காவலரிடம் இருக்க வேண்டிய கைத்துப்பாக்கி செயலாளரிடம் இருந்ததை கண்டு திகைத்து போன பாதுகாப்பு அதிகாரி கைத்துப்பாக்கியை வாசலில் தம்மிடம் ஒப்படைத்துவிட்டு போகும் படிநும் திரும்பி செல்லும்போது அதை பெற்றுச்செல்லும்யாடிம் கூறியுள்ளனர். பின்னர் மக்கள் பிரதிநிதியிடம் இவர் செயலாளரா அல்லது மெய் பாதுகாவலரா என விசாரித்தபோது அவர் செயலாளர் தான் தனது துப்பாக்கியை தான் தற்செயலாக அவரிடம் கொடுத்ததாக சிரித்து கூறி தாஜா பண்ணி கைத்துப்பாக்கியை பாநுகாப்பதிகாரியிடம் ஒப்படைத்து விட்டு காரியாலயத்துக்குள் சென்றிருக்கின்றனர்.

இவர்கள் காரியாலயத்துக்குள் சென்ற பின்னர் தனது கடமையை சரிவர செய்ய வேண்டிய அந்த பாதுகாப்பதிகாரி உள்ளே அனுமதிக்கப்பட்டவர்களின் விபரங்கள் குறிக்கப்படும் பதிவேட்டில் கைத்துப்பாக்கியின் இலக்கத்தை குறிக்க துப்பாக்கியில் இலக்கத்தை பார்க்க முனைந்தபோது அக்கைத்துப்பாக்கியின் இலக்கம் பூரணத்துவமாக அழிக்கப்பட்டிருப்பதைக்கண்டு அதிர்ச்சியடைந்து தனது சக அதிகாரிகளிடம் இச்சட்ட விரோத நடவடிக்கைப்பற்றி கூறி ஆச்சரியம் அடைந்தாராம். உண்மையில் அப்பாதுகாப்பதிகாரி இச்சட்ட விரோத நடவடிக்கைக்கு எதிராக ஏதாவது நடவடிக்கை எடுக்க முனைந்தால் பௌத்த சிங்கள மேலாண்மை கொண்ட சிங்கள காடையனால் தமிழ் மக்களின் ஜனநாயக பிரதிநிதி அவமானப்படுத்தப்பட்டார். சிங்கள அரசாங்கம் தொடர்ந்தும் தமிழ் மக்களை அடக்கியாளவே முற்படுகிறது. அப்படி இப்படி என குழப்பமான வார்த்தை

6ம் பக்கம் பார்க்க

---

## தமிழ் இளைஞர்கள்

(3ம் பக்கத் தொடர்)

அரக்கர்களின் பிடியில் இருந்து தப்பித்து ஓடிவிட்டனர். இவ்வாறு தப்பி சென்ற இளைஞர்கள் பலர் தற்சமயம் கொழும்பு, கண்டி போன்ற இடங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர். இதேவேளை தாக்குதலின்போது புலிகளால் கைது செய்யப்பட்ட தொண்டர் படையினரில் கட்டாயமாக பிடிக்கப்பட்ட இளைஞர்களை புலிகளின் உளவுப்படையின் சிபார்சின் பெயரில் விடுதலை செய்யப்பட்டதுடன் அவர்கள் கொடியவர் கூட்டத்தின் கைகளில் அகப்படாவண்ணம் அவர்கள் விரும்பிய இடத்துக்கு செல்வதற்கு விடுதலை புலிகள் கை செலவிற்கு பணம் கொடுத்தனுப்புவதாகவும் கூறப்படுகிறது.

(ந.நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபையாம் அதற்கொரு ஆண்டு நிறைவாம்

விண்ணகமும் மண்ணுலகும் வியக்கும் வகையில் தமிழ் இனத்துக்கு தனி உரிமை தேடி தனிக்கொள்கையின்மூலம் தன்னிகரற்ற சேவையை எம் இனத்திற்கு நாம் ஆற்றி வந்த காலமது அன்றென்ன இன்றும் கூட எம் கொள்கையில் குறிக்கோளில் மாற்றம் காணுது வீரமுடன் நேருக்கு நேராய் நிற்பவர் நாம்.

அந்நிய நாட்டின்மூலம் எமக்கு சமாதானமாம், அந்நிய படைகள் தாம் எம்மை காக்க வருகின்றனவாம், நாட்டை காக்கிறோம் நம் மக்களை காக்கிறோம். சமாதானம் பேணுகிறோம், சமாதான உடன்படிக்கைமூலம் ஒரு சகப்பதம் காண வந்துள்ளோம் என்று மாகாணசபை என்ற அமைப்பின்கீழ் எமது இன எட்டப்பர்களின் துணைக்கொண்டு எம் நாட்டுக்குள் தம் அதிகாரத்தை பரவலாக்கி சமாதானம் என்ற போர்வையில் சர்வாதிகாரம் காணும் சதி நாசகாரர்களுக்கு ஆண்டு நிறைவு.

அந்நியரின் அதிகாரத்திற்கு தலைச்சாய்த்து பதவி பேராசையில் அவர்களின் நிழலில் நின்றுக் கொண்டு எம் தமிழை எம் தமிழ் மண்ணை எமது தூயகொள்கைகளை சுய லாபத்திற்கு விற்ற விபச்சாரிகள் ஆண்டு நிறைவை கொண்டாடுகிறார்கள்.

சுதந்திர தாகம் என்பது அவர்களின் சுயநலத்தின் கொள்கை தமிழுக்கு தனி மாகாணமா அல்லது எட்டப்பர் போர்வையில் தமிழை விற்று தமிழ் மண்ணை விற்று தூய தமிழுக்கு இழுக்கு ஏற்படுத்தும் மாகாண சபைக்கு ஆண்டு நிறைவாம்.

அவர்கள் ஆட்சியில் நிறைவாக்கியது என்ன கொள்ளைகள், கொலைகள் பழி வாங்கல்கள், தன் தாயையே பதவி ஆசை என்ற மோகத்தின்கீழ் படுகொலை செய்யும் சதி நாசக்காரர்களுக்கு ஆண்டு நிறைவு தம் சகோதரிகளை அந்நியரின் சொற்கேட்டு தாமே கற்பழித்து அவர்களின் வாழ்வை சின்னு பின்னப்படுத்தும் நயவஞ்சகர்களுக்கு ஆண்டு நிறைவு

இவர்களின் ஆட்சியின் கீழ் எம் நிம்மதிகளுக்கு நிறைவு வாழ்வின் இன்பங்களுக்கு நிறைவு எம் இலட்சியங்களுக்கு நிறைவு எம் சுதந்திரத்தும் ஜனநாயக உரிமைக்கும் நிறைவு இப்படி எம் வாழ்வே விரக்தியில் நிறைவு பெறும் நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம். இதற்கிடையே இவர்களின் ஆண்டு நிறைவை யார் கேட்டது எம் நித்திய கருமங்களை செய்ய விடாது தடுக்கும் இந்த மாகாணசபையின் ஆட்சிக்கு நீடிக்காமல் நிறைவு பெறுவதையே நாம் எதிர்பார்த்திருக்கிறோம்.

தேவாரம் பாடியே கோயிலை இடிப்பவர்கள் உண்ட வீட்டிற்கே இரண்டகம் செய்பவர்கள் மக்களை காக்கும் போர்வையில் அவர்களின் வாழ்வின் அழிவிற்கு வழிவகுக்கும் அந்த மாகாணசபையின் ஆட்சிக்கு ஆண்டு நிறைவு.

சுதந்திரம் காண துடித்த எம் இனத்திற்கு தனி ஆட்சி சம உரிமை காண புதுத்தென்றலாய் பூத்த எம் கொள்கைகளுக்கு சாவு மணியை ஒலிக்க செய்து அபிலாசை இருட்டினிலே எம்மை நாளும் வாழவைக்கும் நிலையில் கண்ணிருந்தும்

(7ம் பக்கம் பார்க்க)

## கேள்வி பதில்

எ. சி. உவைஸ்
மன்னார்

கே: யுத்தநிறுத்தத்தின் போது இந்தியப் படையுடன் கை குலுக்கும் விடுதலை புலிகள் எம்முடன் கை குலுக்கினுல் என்ன என திரு. வரதராஜப்பெருமாள் கேட்டிருக்கிறாரே அதுபற்றி உண்மையின் கருத்து என்ன?

ப: வீர தமிழர் எதிரிகளுடன் கை குலுக்குதல் மரபு. ஆனல் எட்டப்பர்களுடன் கை குலுக்கியதாக வரலாறுகள் இல்லை.

செல்வி சாந்தி
வவுனியா

கே: திரு. மு. சிவசிதம்பரம் உண்மையாகவே தனது இறுதி காலம் வரை அரசியலில் இருக்க விரும்புகிறாரா?

ப: இல்லை. அவர் அரசியலை விட்டு விலக விரும்பினுலும் அவர் பிடித்த சனியன் விடாது (இந்தியா)

ஆர். சுந்தர்
கிளிநொச்சி

கே: அக்கா மங்கையர்க்கரசி மீண்டும் அரசியலில் குதிக்க போகிறாராமே?

ப: குதித்தால் கை, கால்கள் உடைந்து விடும் எனவே ஏணிவைத்து மெதுவாக இறங்கும்படி கூறவும்.

எஸ். இராஜா
கண்டி

கே: இலங்கையில் இடதுசாரிகள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்?

ப: வலது குறைந்த நிலையால் இருக்கிறார்கள்.

கே: செல்வராஜா
உடப்பு

கே: தந்தை செல்வா இன்றிருந்தால்?

ப: இன்னும் பல அமிர்தலிங்கங்களை உருவாக்கியிருப்பார்.

கே: ஜீ. ஜீ. பொன்னம்பலம் இன்றிருந்தால்?

ப: ஐ. நா. சபையில் முன்னர் 9 மணித்தியாலங்கள் பேசியவர் இப்போ 9-9 அளவு பேசியிருப்பார்.

சீனத் நூமான்
புத்தளம்

கே: மரம் பழுத்தால் வவ்வால் வரும் என்று கூறிய வண்ணை ஆனந்தனை காணுமே அவர் எங்கே?

ப: பழம் தின்ன வந்த வவ்வால் தண்ணீருடனும் உரத்துடனும் வந்தால் நல்லது. ஆனல் வவ்வால் கோடாரியுடனும், அரிவாளுடனும் வந்திருக்கிறதே!

செல்வன் சி. சுரேஷ்
பம்பலப்பிட்டி

கே: உண்மை பத்திரிகையின் எதிர்காலம் எப்படி அமையும்?

உண்மைகள் பரிபூரணமாக அழியுமட்டும் உண்மை நிலைக்கும் என நான் நினைக்கிறேன்.

க. மகேந்திரன்
வல்வை

கே: வட-கிழக்கு மாகாணங்களின் இன்றைய நிலை என்ன?

ப: குரங்கின் கையில் அகப்பட்ட தூக்கணுங் குருவி கூட்டின் நிலை.

சௌதாசஹீல்
மருதானை

கே: உண்மை முஸ்லீம் காங்கிரசை சாடுவதேன்?

ப: எந்த இன மக்களும் இனவாதத்தை விரும்பவில்லை. நானும் அதை எதிர்ப்பவன். முஸ்லீம் காங்கிரஸ் திரு. கே. எம். பி. இராஜரெத்தின, திரு. அ. அமிர்தலிங்கம் போன்றவர்களின் அடிச் சுவட்டை பின்பற்றுவதால்.

## ஒரு மறுப்பு

கடந்த 15-10-89 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆங்கில பத்திரிகையில் ஈஸ்வரனை தொடர்பு படுத்தி ஒரு அரசியல் இயக்கத்தின் அறிக்கை வெளியாகி இருந்தமை கண்டு தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தி. முன்னுள் தளப் பொறுப்பாளரும் பின்னர் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் ஒரு யிரிவின் செயலதிபராகவும் இருந்து தற்பொழுது எந்தவித அரசியல் இயக்கத்துடனும் சின்னதொடர்பும் இல்லாதிருக்கும் திரு. ஈஸ்வரனே வியப்பும் ஆச்சரியமும் அடைந்தராம்.

அரசியல் திசைவழி தொடர்பான பிரச்சினைகளினுல் அரசியல் இயக்கத்தில் இருந்து வெளியேறி சுமார் 2 ஆண்டுக்கும் மேலான் காலப் பகுதியில் இருந்து எந்த அரசியல் இயக்கத்துடனும் அரசியல் உறவினையோ மாறுக பகை முரண்பாட்டினையோ இவர் கொண்டிருக்கவில்லை என்பதை இவரது நண்பர்கள் தெரிவித்தனர். நிலைமை இவ்வாறு இருக்க திரு. ஈஸ்வரனுடன் எந்தவித அரசியல் உறவும் கொண்டிராமலேயே குறைந்த பட்சம் அவருடன் இதைப்பற்றி பேசப்படாமலேயே அவருடைய பெயரையும் சம்பந்தப்படுத்தி ஈ. யி. டி. பி எனும் அரசியல் இயக்கம் தேர்தல் ஆணையாளரிடம் தங்களையும் அரசியல் கட்சியாக பதிவு செய்யும்படி கேட்டுக்கொண்டது. இவரின் மனநிலையை மிகமோசமாக பாதித்துள்ளதாம். மற்றவர்களின் பெயரினையும் அவர்களின் கடுமையான உழைப்பையும் பயன்படித்தி மக்களுக்கு இனங்காட்டிக்கொள்ளவேண்டிய நிலையில் உள்ள இவர்களின் அரசியல் அரைவேக்காட்டுதனத்தினையும் இவ்வாறுக நெஞ்சறிய பொய்தழுவும் புரட்டுத்தனத்தினையும் மக்கள் வெகு இலகுவில் இனங்கண்டு கொள்ள வேண்டும் என்று இவருடைய நண்பர்கள் தெரிவித்துள்ளனர். இவ்வாறுன தவறுனசெய்திகளை வெளியிட்டு மக்களை குழப்புகின்ற நடவடிக்கையில் ஈடுபடவேண்டாமென்று சம்பந்தப்பட்டவர்களை இவருடைய நண்பர்கள் பகிரங்கமாக கேட்டுக்கொள்கிறார்கள். அதேவேளை இவரை புரிந்துகொண்டவர்களும் மக்களும் இதுபோன்ற சுயநல நோக்கம் கொண்ட பொய்யான செய்தியை நம்பி குழப்பம் அடையவேண்டாம் என்றும் இவருடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன. அதேவேளை ஈஸ்வரன் தேர்தல் ஆணையாளருக்கும் தனது நிலைப்பாட்டை தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாத்தான் வேதம் ஓதுகிறது

## முகமூடி

சென்ற இதழ் தொடர்

(3)

87 ஒக்டோபர் 10ம் திகதிக்குப்பின்னர் தமிழ்பேசும் மக்கள் புதிய வடிவில் அடக்கு முறைகளை சந்திக்க தொடங்கினராம் என கட்டியழுகின்றனர். ஆனால் அது யாரால் என சொல்ல திராணியற்றவர்களாகி விட்டனர்.

உண்மைதான் 87 ஒக்டோபர் 10ம் திகதிக்குப் பின் தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினையுடன் சம்பந்தமில்லாத தீர்த்து வைக்க முடியாத ஒப்பந்தத்தையும் அமைதியின் பெயரால் எமது மண்ணில் காலடி வைத்த அன்னிய ஆக்கிரமிப்பு அரக்கர் படையை துரத்தி அடிக்க வேண்டிய உடனடி அவசியத்தை உணர்த்த விடுதலை புலிகள் உலகின் நான்காவது பெரிய படையை கண்டு கலங்காது தமது தாயகத்தை காக்கும் பணியை ஆரம்பித்தார்கள் விடுதலை புலிகளின் அதிரடி தாக்குதல்களுக்கு ஈடு கொடுக்க முடியாத ராட்சதப்படை தமது ஆற்றாண்மையை அப்பாவி தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக திருப்பி தமது பழிவாங்கல்களை கட்டவிழ்த்து விட்டனர். இந்த நெருக்கடிகளில் இருந்து அப்பாவி தமிழ் பேசும் மக்களை பாதுகாப்பதற்கு ஏற்புடையதாக அன்னிய படைக்கு ஆதரவாக இயங்கும் அனைத்து சக்திகளையும் ஒழித்து கட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. எனவே விடுதலை புலிகளின் தாக்குதலுக்கு அன்னிய படையின் அடிவருடிகளும் அகப்படவேண்டியதாயிற்று. இதில் தவறென்ன இருக்க முடியும். இவ்வாறான அடிப்படை பிரச்சினைகளை தீர்க்க முடியாத ஒப்பந்தத்துக்கு எதிராக ஈரோஸ் எடுத்த நடவடிக்கை என்ன?

இந்தியப்படை வெளியேற வேண்டும், ஒப்பந்தம் செயலிழக்கப்பட வேண்டும் என்ற கருத்தோ அதற்கான ஆக்கப்பூர்வமான நடவடிக்கையோ இந்தியப் படை வெளியேற வேண்டும் என்ற பிடிவாதமான நடவடிக்கைகள் அனைத்தும் விடுதலைப் புலிகளுக்கு உரியவையே தவிர வேறு எந்த ஜனநாயக பாதை தமிழ் இயக்கங்களுக்கு உரியதல்ல கறையான் புற்றெடுக்க கருநாகம் குடிகொண்ட கதையாக விடுதலைப் புலிகளின் உறுதியாலும், தியாகத்தாலும் நிறைவேறப் போகும் காரியங்களில் பங்காளியாக முயற்சிப்பது அரசியல் நாகரீகத்துக்கு அப்பாற்பட்ட படுகேவலமான நடவடிக்கைகள் என கூறின் அது தவறாகாது. இப்படியாக முன்னுக்குப் பின் முரணாக படுசந்தர்ப்பவாத அறிக்கைகளை வெளியிடும் ஈரோஸ் தாம் ஆயுதம் ஏந்தவும் பாராளுமன்றம் சென்றதற்கும் கூறுகின்ற காரணங்கள் விசித்திரமானவை.

1. ஈரோஸ் இயக்கத்தின் மாவட்டப் பொறுப்பாளர்கள் மட்டுமன்றி தமது கட்சியின் முக்கிய பாராளுமன்ற உறுப்பினர்களையும் முற்றாக ஒழித்துக்கட்ட திட்டம் தீட்டப்பட்டமை.

2. ஜனாதிபதி பிரேமதாஸ இந்தியப்படை வெளியேற்றம் தொடர்பாக திட்டவட்டமான கால எல்லையை தீவிரமாக ஈடுபட்ட தன் முயற்சிகளை கணக்கிலெடுத்தும் அவ்வாறு இந்தியப்படை கட்டம் கட்டமாக வெளியேறுமிடத்து உருவாக இருக்கும் புதிய ஆள்நிலைகளை கவனத்தில் கொண்டு செயல்பட வேண்டியிருந்தமை.

3. 87 ஒக்டோபர் மாதத்தில் இருந்து நிரந்தரப் போர் நிறுத்தம் கோரி ஈரோஸ் எடுத்த முயற்சிகள் வெற்றியளிக்காத நிலையில் இக்கோரிக்கையை தீவிரமாக வலியுறுத்த விரும்பியும் இவ்வாறு ஏற்படுமிடத்து அதனால் ஏற்படும் ஆபத்துக்களுக்கு முகம் கொடுக்கும் முகமாக தாம் செயற்பட வேண்டியிருந்தமை.

### உண்மையின் கருத்து

இம்மூன்று விடயங்களையும் ஆராய்ந்து பார்ப்பின் பல குளறுபடிகள் வெளியாகும்.

1. இவர்களது இயக்க முக்கிய உறுப்பினர்களையும் பாராளுமன்ற உறுப்பினர்களையும் கொலை செய்ய திட்டமிட்டது யார்? நீங்கள் மீண்டும் ஆயுதம் ஏந்திய பின்னர் உங்களால் காப்பாற்றப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை என்ன? இவற்றுக்கும் பாராளுமன்றம் சென்றதற்குமுள்ள தொடர்பு என்ன? ஈரோஸ் பதில் சொல்லுமா?

2. இந்தியப்படை வெளியேறினால் உங்களுக்கு ஆபத்தா? அவ் ஆபத்து யாரால்? இச்சந்தேகங்களின் ஊகப்படி அந்நியப் படை எமது மண்ணைவிட்டு வெளியேறுவதை நீங்கள் விரும்பவில்லையா? இவற்றுக்கும் நீங்கள் பாராளுமன்றம் சென்றதற்கும் உள்ள தொடர்பென்ன? உங்கள் பாதுகாப்பை இலங்கை பாராளுமன்றத்தால் தான் உத்தரவாதப்படுத்த முடியும் என்ற கருத்தை ஒத்து கொள்கிறீர்களா?

3. நீங்கள் கூறுகிறபடி 87ம் ஆண்டு முதல் போர் நிறுத்தம் கோரி நிறைவேற முடியாமல் போனதை பாராளுமன்றம் சென்றதன் மூலம் நிறைவேற்றி வைப்பீர்களா? நிறைவேற முடியாமல் போன கோரிக்கையை நீங்கள் ஆயுதத்தால் சாதிக்கப்போகிறீர்களா? இதன்படி நீங்கள் இந்தியப்படையுடன் யுத்தம் புரியத் தயாரா? ஜனநாயகப் பாதைக்கும் ஆயுத பாவனைக்கும் உள்ள தொடர்பென்ன? போர் நிறுத்த கோரிக்கையை தீவிரமாக வலியுறுத்தி செயற்படுமிடத்து ஏற்படும் ஆபத்துக்கள் எனின் அது எவ்விதமான ஆபத்துக்கள்? யாரால் ஆபத்துக்கள் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகளை கண்டு கொண்டீர்களா? அப்படியானால் நீங்கள் ஜனநாயக பாதையைக்கைவிட்டு மீண்டும் ஆயுதம் ஏந்தி போராட தயாராகி விட்டீர்களா? நீங்கள் ஆயுதம் ஏந்துவதன்மூலம் யுத்த நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்தி விடுவீர்களா? எதிர்பார்க்கும் யுத்த நிறுத்தத்தை செயலுருபடுத்த வேண்டியவர்கள் இலங்கை அரசா அல்லது இந்திய அரசா?

(தொடரும்)

## பத்திநி

(ம்4 பக்கத் தொடர்ச்சி)

கள் கலந்த அழகுமிழில் அறிக்கை விடுத்து தமக்கு துணையாக அப்பாவி தமிழர்களையும் சேர்த்து கொண்டு அந்நிய ராணுவ உதவியுடன் வட-கிழக்கு மாகாணங்களில் ஒருநாள் ஹர்த்தால் நடத்தினாலும் நடாத்தி விடுவர்.

நமது நாட்டு ஜனநாயக மரபுபடி இவ்வாறான செய்திகளுக்கு ஊட்டம் கொடுத்து பத்திரிகை வியாபாரத்தை பலப்படுத்தி கொள்ளும் பத்திரிகைகளும் தலைப்பு செய்தியாக இவற்றை வெளியிட்டு இனவாத தீக்கு எண்ணை ஊற்றி விடுவர்.

இதே தினத்தன்று அதே காரியாலயத்தில்பெரும்பான்மை இனத்தின் தென்னிலங்கை தேசிய கட்சியின் அதிகாரத்தில் உள்ள ஓர் மக்கள் பிரதிநிதியும் அங்கு வந்திருக்கிறார். ஆனால் அவரை சரியாக அடையாளம் கண்டு கொள்ளாத பாதுகாப்பு அதிகாரிகள் வாயில் வைத்து அவரை விசாரித்து அவர் காண வந்த அதிகாரியிடம் அனுமதி பெறுகையில் தான் அவர் யார் என்பதை இனம் கண்டு உள்ளே அனுமதித்துள்ளனர். அவ் உயர்ந்த மனிதரும் தன்னை அலட்டி கொள்ளாது சாதாரண மனிதனாகவே நடந்து கொண்டுள்ளனர். இச்சம்பவத்தை நாம் சற்று யதார்த்தபூர்வமாக ஆராய்ந்து பார்ப்பின் பல அதிர்ச்சி தரும் சந்தேகங்கள் வெளிப்படும்.

(தொடரும்)

## தமிழ் இளைஞர்களை புலிகள் மீட்டனர்

அம்பாறை மாவட்ட தம்பிலுவில் திருக்கோவில் கிராமங்களில் ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்க முகாம்களின்மீது விடுதலை புலிகள் மேற்கொண்ட அதிரடி தாக்குதலால் கட்டாய ராணுவ பயிற்சியில் அகப்பட்டு பலிக்கடாய்களாக பலி கொடுக்க மாகாண சபை ஆளுங்கட்சியினாலும் அவர்களின் நேச அணிகளாலும் பணயக்கைதிகளாக்கப்பட்டிருந்த அப்பாவி தமிழ் இளைஞர்கள் நூற்றுக்கணக்கானோர்

(6ம் பக்கம் பார்க்க)

## இனியும் விடமாட்டோம்

புறப்படுவோமே தம்பி புறப்படுவோமே
துப்பாக்கி தூக்கிக் கொண்டு புறப்படுவோமே
வந்துவிட்டான் எமையாள இந்தியனிங்கு]
விடமாட்டோம் நாமெல்லாம் ஒன்று திரண்டு
புறப்படுவோமே

தமிழீழம் தலை நிமிர்ந்து வந்தது தம்பி
தனியுரிமை கேட்டெல்லோ போரும் தொடுத்தோம்
மலைபோல வந்திறங்கினான் இந்தியன் அன்று
எமையாழப் போறானாம் இந்தியன் இன்று
புறப்படுவோமே

எமையாழ இந்தியனை விடவா முடியும்
தமிழீழ அன்னையும் இதனை பொறுக்கும்
வல்லரசு நாடானால் என்னடா தம்பி
உன் அஞ்சாத நெஞ்சிற்கு இணையாகுமா
புறப்படுவோமே

தமிழீழம் தாயின்றி தவிக்குது தம்பி
தாய்தானே தனிக்காட்டில் தவம் செய்கிறாள்
நரிக்கூட்டம் நமையழ விடவும் மாட்டோம்
நாம் துப்பாக்கி தூக்கிடுவோம் ஒன்று திரண்டு
புறப்படுவோமே

ஈழத்துளிர் வன்னித்தம்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்நிய படை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கும் பெருந்தெகையான ஆயுதங்களை கையளித்து வருவது அப்பகுதியின் நிரந்தரமான அமைதிக்கு ஏற்புடையதாகாது என்பது சொல்லி தெரிய வேண்டிய தொன்றில்லை. சகல குழுக்களிடமும் ஆயுதங்களை மீள பெற்று அப்பாவி மக்கள் மத்தியில் ஆயுத பயமற்ற நிலையை உருவாக்குதலே நிரந்தரமான நடவடிக்கைக்கு ஏற்புடையதான நடவடிக்கையாகும்.

ஆயுத பயமறற நிலையை உருவாக்கவேண்டிய கடைப்பாடுடைய இந்திய ராணுவம் தனக்கு சாதகமான குழுக்களுக்கு வெவ்வேருக தனித்தனியே சரமாரியாக ஆயுதங்களை வழங்கியிருப்பது யார் யாருடன் போராடுவதற்காக என்ற நியாயமான கேள்வி எழுப்பப்படுகிறது. அன்னிய ராணுவத்தின் நடவடிக்கைகளை யதார்த்த பூர்வமாக சிந்தித்து பார்ப்பின் இந்திய ராணுவத்தின் கபட நோக்கம் வெளிப்படும். தற்சமயம் அன்னிய ராணுவத்தால் தமிழ் முஸ்லிம் குழுக்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் ஆயுதங்களால் ஆரம்பத்தில் குழு மோதலாக ஆரம்பித்து இறுதியில் இன மோதலாக நிலைநிறுத்தப்படும். பிரிட்டிஷார் இலங்கைக்கு சுதந்திரம் வழங்கிய போது அவர்கள் பெரும்பான்மை சிறுபான்மை இன மக்களிடையே முரண்பாடுகள் ஏற்படுத்த கூடியதான நடவடிக்கைகளின் வெளிப்பாடே கடந்த 35 வருடங்களாக வளர்ச்சியடைந்து 1983ம் ஆண்டு தமிழ் இளைஞர்களை ஆயுதம் ஏந்தி போராட வைத்தது. இதன் கொடிய விளைவுகள் சொல்லி தெரியவேண்டிய தொன்றல்ல. ஆனல் இன்று இந்திய ராணுவம் சிறுபான்மை இனங்களுக்குள் பாரிய உயிர், உடமை அழிவுகள் உருவாக ஏற்புடையதாக தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் உள்ள தனது அடிவருடி இயக்கங்களுக்கும் கட்சிகளுக்கும் அவர்களது சொந்த பாதுகாப்புக்கென ஆயுதங்களை வழங்கியிருப்பது கிழக்கு மாகாணத்தை ஓர் குட்டி சைப்பிரஸ் ஆக மாற்றி குழப்பி இந்தியா தனது விஸ்தரிப்புவாதத்தை நிலைநிறுத்தி கொள்வதற்கான தந்திரோபாயமே என்பதை ஒவ்வொரு தமிழ் முஸ்லிம் அப்பாவி மக்களும் உணர்ந்து விஸ்தரிப்பு வெறியர்களின் சூழ்ச்சிகளை முறியடிக்க தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரும் ஓரணி திரண்டு அன்னிய ஆக்கிரமிப்பு ராணுவத்தின் அடிவருடிகளை நிராகரித்து தூக்கியெறிய முன்வர வேண்டும். இதை சரிவர செய்ய முன்வரத் தவறும் பட்சத்தில் மேற்படி இரண்டு சமூகத்தினரும் இலங்கையின் எதிர்கால வரலாற்றில் தமக்கு தாமே புதைகுழி வெட்டி கொண்ட சமூகன் என்ற கறைபடிந்த சரித்திரத்தை நிரந்தரமாக பதித்து கொண்டவர்களாவர்.

குறிப்பு:-

முஸ்லிம் இளைஞர்களுக்கு ஆயுத பயிற்சி வழங்ககூடாதென்றோ ஆயுதங்கள் வழங்கக்கூடாதென்பதோ உண்மையின் நிலைப்பாடு அல்ல ஆனல் இந்த ஆயுதங்கள் யாரால். யார்மூலம் யாருக்கெல்லாம் எதற்காக வழங்கப்படுகிறது என்பது தான் நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டியது இன்றைய நெருக்கடியான காலகட்டத்தில் அவசியமானது.

இன்று வட-கிழக்கு மாகாணத்தில் வாழுகின்ற தமிழ், முஸ்லிம் அப்பாவி மக்கள் வேண்டி நிற்பது அமைதியும், சாந்தமான சாதாரண வாழ்க்கை ஏற்படுத்த சகல தரப்புகளிடமும் ஆயுதங்கள் களையப்படுவதே ஏற்புடையதானது. நிலைமை இவ்வாறிருக்கையில் அமைதியையும், பாதுகாப்பையும் ஏற்படுத்துவதற்காக தமிழ் முஸ்லிம் இளைஞர்களை பிரித்து ஆயுதங்கள் வழங்கப்படுவது சமூகங்களுக்கு இடையில் மோதல்களை உருவாக்குவதற்கே உதவும் என்பது சொல்லி தெரிய வேண்டிய தொன்றில்லை. எனவேதான் உண்மை சகல தரப்பிலும் ஆயுதம் களையப்பட வேண்டும் என்பதில் உறுதியான நிலைப்பாட்டை கொண்டுள்ளது. இதற்கு பல உறுதியான காரணங்களை கடந்த கால நடவடிக்கைகள் உணர்த்தியுள்ளது.

(ஆ-ர்)

# பக்கிரிகளின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பந்தப்பட்ட பக்கிரிகளை எதோ மத சம்பந்தமான விடயத்துக்காத தேடுகிருர் என எண்ணி அவ்வாருன ஓர் பக்கிரியிடம் அழைத்து சென்று காண்பித்திருக்கிருர். ராணுவ வீரன்குறிப்பிட்ட பக்கிரி என்னும் வார்த்தை ஹிந்தி மொழியில் ஆட்டை குறிக்கும் என்பதை வழிப் போக்கரோ அல்லது அவரால் அறிமுகப்படுத்தப்பட்ட பக்கிரி ஏன்பவரோ அறிந்திருக்கவில்லை. எனவேதான் வழிபோக்கர் மதசும்மந்தமானவரை காண்பித்துள்ளார்

பக்கிரியை சந்தித்த இராணுவவீரன் அவர்தான் தமது ஆட்டை திருடிவிட்டார் என நினைத்து சாப்பிட்டாயிற்ரு என கைசைகை மூலம் கேட்டுள்ளான். தனது மதிய போசனத்தை முடித்துக் கொண்ட பக்கிரியும் ஆம் என பதில் கொடுத்துள்ளார் எனவே அவனா ராணுவ வீரன் தன்னுடன் அழைத்து கொடு மீண்டும் வன் பக்கிரி என கூறவே அப்பக்கிரி தனது நண்பரான இன்னும் ஒரு பக்கிரியிடம் அழைத்து சென்று அவரை ராணுவவீரனுக்கு அறிமுகப்படுத்தவே ராணுவவீரனும் அவரிடம் சாப்பிட்டாயிற்ரு என கைசைகை மூலம் கேட்கவே அவரும் ஆம் என பதிலிறுத்துள்ளார். இவர்கள் இருவருமாக தமது ஆட்டை திருடி பங்கு போட்டுக் கொண்டுள்ளார்களென என்ணிய அவ் ராணுவ விரன் இருவரையும் தமது முகாமுக்கு அழைத்து சென்றுள்ளார். அவர்களும் தமக்கு இன்நு ஏதோ ஒருவகையாக சம்பாத்தியம் கிடைக்க போகிறது என எண்ணி மகிழ்ச்சியுடன் இராணுவ வீரனுடன் சென்றிருக்கின்றனர்

முகாமை அடைந்ததும். இராணுவ வீரன் சினங்கொண்டு அவ்விருவரையும் மிருகத்தனமாக தாக்க தொடங்கியுள்ளான். ஒன்றும் அறியாத அப்பாவிகளான அவர்கள் குய்யோ முறையோ என கூச்சல் போடவே அவ்வழியாய் வந்த தமிழ் இராணுவ வீரன் அவர்களிடம் ஏனய்யா இவனிடம் அடிபடுகிறீர்கள் என கேட்கவே அவர்களும் தங்களை அழைத்து வந்து இவ்விதமாக தாக்குகின்ருன் என கூறியுள்ளனர். விடயத்தை சரியாக புரிந்து கொண்ட அந்த தமிழ் வீரன் பக்கிரி என்பது உங்களையல்ல அது ஹிந்தி மொழியில் ஆட்டை குறிக்கும் சொல் நீங்கள் ஏன் சரியாக விசாரிக்காமல் இவனிடம் சிக்கினீர்கள்என கூறி இராணுவ வீரனுக்கு அவர்களை பற்றிய விபரத்தை கூறி அவர்கள் அப்பாவிகள் என்பதை தெரிவித்துள்ளான். அதை தொடர்ந்து இராணுவ வீரனல் அவர்கள் விடுவிக்கப்பட்டார்களாம். நமது நாட்டில் நமது மக்களில் யாரும் பயன்படுத்தாத மொழியை தெரிந்து கொள்ளாத காரணத்தால் நாம் எல்லாம் அர்த்தமற்ற தண்டனைகளை குற்றம் செய்யாமலே அனுபவிக்க வேண்டியிருக்கிறது என இவ்விடயம் அறிந்த சிலர் கூறி வேதனைப்பட்டனர்.

(ந, நி.)

# ஒருவரின் பணத்துக்கு உரிமை கொண்டாடும் மனைவியர் அறுவர்

அண்மையில் கிழக்கு மாகாணத்தில் சொந்த இயக்கத்தின் சூழ்ச்சியால் கொல்லப்பட்ட ஒருவரின் மரணத்துக்காக அவரின் மனைவியர் அறுவர் உரிமை கொண்டாடி அவர் சார்ந்த டெலோ இயக்க முகா முக்கு படையெடுக்கின்றனராம்.

இதில் கவனிக்க தக்க விஷேசம் என்னவெனின் இவர்களில் ஒருவரும் சட்டபூர்வமான மனைவியர் இல்லை என கூறப்படுகிறது. எனவே பூனை அப்பம் பகிர்ந்தகதையாக டெலோ இயக்கம் இறந்தவரின் பணத்தை ஏப்பம் விட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என கூறப்படுகிறது.

தமிழ் மக்களை பாதுகாப்பவர்கள் எனக்கூறிக்கொள்ளும் அன்னிய அடிவருடிகள் எமது தாயகத்தை காட்டி கொடுப்பதோடு திருப்தி படாது தமிழ் கன்னியரின் வாழ்வையும் தமது மன்மதலீலைகளுக்கு பலி கொண்டு வருகிருர்கள் என்பதற்கு இதுநல்லதோர் எடுத்துக்காட்டு என அப்பகுதி மக்கள் கூறுகிருர்கள்.

(ந. நி.)

# மாகாண...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

குருடர்களாய்வாழவைத்து வேடிக்கை காட்டும்விட்டில் பூச்சிகளுக்கு ஆண்டு நிறைவு.

சோக முத்திரைகளை எம் மக்களின்முகத்தினில் குத்தி அதில் சுவர்க்கத்தின் இன்பத்தை காணும் நரிகளுக்கு ஆண்டு நிறைவு கண்ணீர் கடலில் மக்களை நனைத்து அவர்களின் இரத்தத்தை உறிஞ்சும் கட்சிக்கு ஆண்டு நிறைவு பள்ளி மாணவ மாணவிகளை கட்டாய பயிற்சி என்ற தம் சர்வாதிகார கொள்கையின் திட்டத்திற்கு பலாத்காரமாக இட்டு சென்று அவர்களின் எதிர்காலத்தை மட்டுமன்றி எம் இனத்தின் எதிர்பார்ப்புகளை ஏமாற்றத்தின் விளிம்பிற்கு கொண்டு சென்ற கொடுமைக்காரர்களின் ஆட்சிக்கு ஆண்டு நிறைவு விழா.

(தொடரும்)

தலைநகருக்கு வருகை தரும் பயணிகளுக்கு நம்பிக்கையான
சிறந்த அறுசுவை சைவ உணவுக்கு ஏற்ற ஒரே ஸ்தாபனம்

## ராஜேஸ்வரி பிராமணுள் ஹோட்டல் அன்ட் குரேசறிஸ்

கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக உள்ள

இங்கு உங்களுக்குத் தேவையான சாப்புச் சாமான்களும், கதை புத்தகங்கள்
பத்திரிகைகளுடன் உங்கள் அபிமான பத்திரிகையான உண்மையையும்
இங்கே பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முஸ்லிம் காங்கிரஸ் தலைவரின் கொலை முயற்சி

# அந்நிய படையின் ஓர் நாடகமா?

## தீட்டிய மரத்தில் கூர்பார்க்கும் துரோகம்

அண்மையில் ஈ-என்-டி-எல்-எப்- இயக்கத்தினரால் முஸ்லீம் காங்கிரஸ் மாகாணசபை உறுப்பினர் அலி உதுமான் எதுவித காரணமுமின்றி படுகொலை செய்யப்பட்டதும் இதை சாக்காக கொண்டு முஸ்லீம் காங்கிரஸ் வட்-கிழக்கு மாகாணசபை ஆளும் கட்சியை காரசாரமாக சாடியதும் (நானும் நோகாமல் அடிக்கின்றேன் நீயும் ஓயாமல் அழு என்பது போல்) மாகாணசபைவரவு-செலவு திட்ட விவாதத்தை பகிஷ்கரித்ததும் இதனை தொடர்ந்து முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் ஜனாப் அஷ்ரப்பை கொலை செய்ய முயல்வது ஈ-என்-டி-எல்-எப் துரத்துவது போல் துரத்தியதும் ஜனாப் அஷ்ரப் தப்பிக்க ஓடுவதுபோல் ஓடியதும் மதில் மேலால் தப்பி பாய்வதுபோல் பாய்ந்து ஓடியதும் இச்சம்பவங்களை மூலமாக கொண்டு முஸ்லீம் காங்கிரஸ் தமிழ் முஸ்லீம் மக்களை மோதவிடக்கூடிய வகையில் கன்னா பின்னா என பத்திரிகைகளுக்கு அறிக்கைகளும் காரசாரமான பேச்சுகளும் முஸ்லீம் இளைஞர்களை வன்முறைக்கு தட்டியனுப்பக்கூடிய வகையில் முஸ்லீம்களை ஆயுதம் ஏந்த வைக்காதீர் என அறைகூவியதும் இவற்றை தொடர்ந்து வட-கிழக்கு மாகாணசபை ஆளும் கட்சி ஊடாக இந்திய ராணுவம் பெருந்தொகையான ஆயுதங்களை வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் முஸ்லீம் காங்கிரஸ் உறுப்பினர்களின் பாதுகாப்புக்கென வழங்கியுள்ளதும் முஸ்லீம் காங்கிரசும் ஏனைய இயக்கங்களை பின்பற்றி முஸ்லீம் இளைஞர்களை கட்டாய பயிற்சிக்கு ஆள் திரட்ட திட்டம் தீட்டி வருவதும் நடந்து முடிந்ததும் நடந்து கொண்டிருப்பதுமான கதைகள்-

இச்சம்பவங்களை யதார்த்த பூர்வமாக ஆராய்ந்து பார்ப்பின் பல தெளிவான உண்மைகளை உணர முடியும். மேற்கூறிய சம்பவங்கள் அனைத்தும் அந்நிய ராணுவ உளவுப் பறையின் திட்டமிடப்பட்ட நாடகம் என சந்தேகிக்கக் கூடிய பல சான்றுகள் உண்டு. ஈ.என்.டி.எல்.எப். என்னும் இயக்கம் இந்திய ராணுவத்திரால் வெளிப்படையாக வளர்த்து ஆளாக்கப்பட்ட இயக்கம் ஏனைய இரண்டு இயக்கங்களும் நேரடியாக இந்திய ராணுவத்தினதும் அவர்களது உளவுப் படையினதும் நேரடி கட்டுப்பாட்டுக்குள் அடங்கியவை என்பதை அவர்களது ஒவ்வொரு நடவடிக்கையும் ஆதாரபூர்வமாக வெளிப்படுத்துகின்றது. அதேவேளை ஈரோஸ் முஸ்லிம் காங்கிரஸ் போன்றவை இந்திய உளவுப் படையின் நடவடிக்கைகளை நவீன அணுகுமுறையில் மக்கள் மத்தியில் செயலுருப்படுத்துபவர்கள். மொத்தத்தில் மேற்படிஐந்துஇயக்கங்களும், கட்சிகளும் இந்திய ராணுவ உளவுப் படையை பிரதான முதலாளியாகக் கொண்ட கிளைக் கம்பனிகள் என்பது தெளிவாகிறது.

இவ்வாறான நிலைப்பாட்டை கொண்ட கம்பனிகள் தமது பிரதான இந்திய முதலாளியை மீறி செயல்பட முடியாது. எனவே தனது கையாட்கள் ஒருவரை ஒருவர் தாக்குவதை இந்திய உளவுப் படை ஒரு போதும் அனுமதிக்கப் போவதில்லை என்பது யதார்த்தம். அதிலும் அப்பாவி முஸ்லிம்கள் இந்திய ராணுவத்தின் மீது கொண்டுள்ள வெறுப்பு வெளியுலகுக்கு தெரியா வண்ணம் மூடிமறைத்து இந்திய ராணுவத்தின் முஸ்லிம்களுக்கு எதிரான நடவடிக்கைகள் அனைத்தையும் நியாயப்படுத்தும் முஸ்லிம் காஇகிரஸ் தலைவரை இழக்க இந்திய ராணுவம் ஒரு போதும் சம்மதிக்கப்போவதில்லை. அதே வேளை முஸ்லிம் இளைஞர்களை கட்டாய ராணுவப் பயிற்சிக்கு சேர்த்துக்கொள்ள வேண்டிய தேவை இந்திய ராணுவத்துக்கு இருந்தது. இதை நடைமுறைப்படுத்த முனையும் பொழுது . முஸ்லிம் காங்கிரசின் முகமூடியும் கிழிந்துவிடாமல் இருக்க வேண்டியது அவசியம். எனவேதான் தன்னால் முற்றுமுழுதாக வளர்க்கப் பட்ட ஈ.என்.டி எல்.எப். இயக்கத்தின் மூலம் இந்த முஸ்லிம் காங்கிரஸ் தலைவரை கொலைசெய்ய முயல்வது போலும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் தப்பி ஓடுவது போல் ஓடியதும் தற்சமயம் முஸ்லிம் காங்கிரசின் பாதுகாப்புக்கு என (அப்பாவி முஸ்லிம்களுக்கு அல்ல) பெருவாரியான ஆயுதங்களை கையளித்துள்வதும் முஸ்லிம் இளைஞர்களை கட்டாய பயிற்சிக்கு ஆள் பிடிக்க ஏற்புடையதாக அமைத்துக் கொண்டனர் என்ற சந்தேகங்களை ஒதுக்கிவிட முடியாது.

(ந.நி)

## யார் இவர்?

### கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்

ஆரம்பத்தில் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை எதிர்த்தவர் இடையில் தேர்தலுகளாக்க ஒப்பந்தத்துக்கு அடிபணிந்தவர். இனவாதம் பேசுவதில் த.வி.கூ.யை மிஞ்சுபவர் இனவாதத்தால் பல பதவிகளை கைப்பற்றியவர் கட்சியின் தலைவர் அவர். இவர் அந்நிய ராணுவ உளவு பிரிவுடன் பேரம் பேசியபோது உளவு படையின் ஜெய்யானவர் இவரது பேச்சுக்களை இவருக்கு தெரியாமல் ஒலிப்பதிவு செய்து கொண்டாராம். அந்நியரை மிஞ்சினால் அவ் ஒலிப்பதிவு நாடா வெளியிடப்படும் என எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளதாம். எனவே தம்மை நம்பிய மக்களை பலி கொடுத்து வருகிறாராம்.

## மீண்டும்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களில் மாகாணசபை ஆளும் கட்சியினராலும் அவர்களின் நேச அணிகளினாலும் மீண்டும் முடுக்கிவிடப்பட்டுள்ளதாம். இம்முறை எவரும் தப்பிவிட முடியாதபடி வட-கிழக்கு மாகாணங்களில் இருந்து தென்னிலங்கை நோக்கிவரும் வாகனங்களையும் தென்னிலங்கையில் இருந்து வட-கிழக்கு மாகாணங்களுக்கு செல்லுமகின்ற வாகனங்களும் வழி மறிக்கப்பட்டு பலத்த சோதனைகளுக்கு உட்படுத்தப்படுகின்றன. இச்சோதனைகளின்போது அகப்படும் இளைஞர்கள் அனைவரும் கட்டாய ராணுவத்திற்காக பிடிக்கப்படுகிறார்களாம். இவ்விதமாக அகப்பட்டுள்ளவர்களில் பலர் வெளிநாட்டு பிரயாணத்துக்கு விமான டிக்கட் பெற்றவர்களும் அடங்குகிறார்கள் என கூறப்படுகிறது.

ஏற்கனவே பலாத்காரமாக பிடித்து பயிற்சி அளித்து அம்பாறை மாவட்டத்தில் இந்தயப்படையின் இடைவெளியை நிரப்ப அனுப்பிவைக்கப்பட்ட இளைஞர்கள் பலர் ஆயுதங்களுடன் விடுதலை புலிகளுடன் இணைந்து விட்டார்கள் என நம்பகரமான செய்திகள் கூறுகின்றன. அத்துடன் பல இளைஞர்கள் தமக்கு கிடைக்கும் இடைவேளைகளை பயன்படுத்தி தலைநகருக்கும் தப்பி வந்துள்ளனர் கட்டாயமாக பயிற்சிபெற்ற இளைஞர்கள் இவ்விதமாக நடந்து கொள்கையில் மேலும் மேலும் இளைஞர்களை கட்டாயமாக பயிற்சிக்கு பிடிப்பது பற்றி அப்பகுதி மக்கள் மத்தியில் இவ் இயக்கங்கள் சூடுசுரணை அற்றவர்கள் என பேசிக் கொள்கின்றனர். (ந. நி.)

## பாதகர்களின் படுகொலை

அண்மையில் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சார்ந்த பழுகாமம் என்னும் கிராமத்தை பிறப்பிடமாக கொண்ட கிராம சேவையாளரான திரு. கேந்திரராஜா என்பவர் களுவாஞ்சிக்குடி கிராமத்தில் வைத்து படுகொலை செய்யப்பட்டுள்ளார். இது பற்றி மேலும் தெரிய வருவதாவது: திரு. கேந்திரராஜா சம்பவதினம் தான் வெளிநாடு செல்வதற்காக மட்டக்களப்பு நகரில் சில தங்க ஆபரணங்களை அடைமானம் வைத்து ருபா 15.000 பணத்துடன் மோட்டார் சைக்கிளில் தனது சொந்த கிராமத்துக்கு சென்று கொண்டிருக்கையிலேயே அவர் கிரிமினல் குண்டர்களால் வழிமறிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டதுடன் அவர் எடுத்து சென்ற பணம் ருபா 15000 அவர் அணிந்திருந்த தங்க மோதிரம், சங்கிலி ஆகிய ஆபரணங்களுடன் அவரது மோட்டார் சைக்கிலும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது என கூறப்படுகிறது.

இவ்விதமாக இவரை கடத்தி சென்று கொலை செய்தவர்கள் மாகாண சபை ஆளும் கட்சியான ஈ, பி. ஆர். எல். எப். இயக்கத்தை சேர்ந்த கிரிமினல் குண்டர்கள் என அப்பகுதி மக்கள் மத்தியில் பேச்சுக்கள் அடிபடுகின்றன. இவ்விதமாக கொலை செய்யப்பட்டவரின் பூதவுடலை கொலைகாரர்கள் களுவாஞ்சிக்குடி கடற்கரையில் புதைத்ததாக அவரது உறவினர்களால் மறுநாள் அவரது சடலம் தோண்டி எடுக்கப்பட்டு சமய ஆசாரப்படி அடக்கம செய்யப்பட்டதாக கூறப்படுகிறது.

திரு. கேந்திரராஜா நகைகளை அடைமானம் வைத்து பணம் பெறுவதை அவதானித்திருந்த கொலைகாரர் அவரிடம் வழிமறித்து கொள்ளையடிக்கையில் அவர் கொள்ளையர்களை இனம் கண்டு கொண்ட காரணத்தினாலேயே அவர் படுகொலை செய்யப்பட்டார் என நம்பகரமான முறையில் அப்பகுதி மக்கள் பேசிக்கொள்கிறார்கள். எது எவ்வாறாயினும் கொள்ளையர்கள் எதிர்பார்த்த அளவு பெரும் தொகையானபணம் அவரிடம் இருக்கவில்லை. மொத்தத்தில் ருபா 35,000 பெறுமதியான பணமும் நகையுமே கொள்ளையர்களுக்கு அகப்பட்டதாக தெரியவருகிறது.

ஒரு மனிதன் இறந்தால் ஒரு தடவைதான் அப்பூதவுடல் அடக்கம் செய்வது வழக்கம். ஆனால் இப்பொழுதெல்லாம் வட-கிழக்கு மாகாண தமிழர்களின் உடல்கள் இரண்டு தடவை அடக்கம் செய்யப்படுகிறது. ஒருதடவை கொலைகாரர்களாலும் பின்னர் பழுதடைந்த நிலையில் உறவினர்களால் தோண்டி எடுக்கப்பட்டு மறுதடவை சாஸ்திர முறைகளுக்கிணங்க அடக்கம் செய்யப்படுகிறது. அதிகாரப்பரவலாக்களின் அற்புத சக்திகளில் இதுவும் ஒன்று என அப்பகுதி மக்கள் பேசிக்கொள்கிறார்கள்.

(ந. நி.)

இப்பத்திரிகை கொழும்பு-15, 65, பெர்கிஸன் வீதியிலுள்ள உண்மை வெளியீட்டகத்தினால் கொழும்பு சாலினோ அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org